Registered as a News Paper in Sri Lanka  பக்கங்கள் 04  விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம் 02  பெப்ரவரி  (27 02 1991)  புதன்கிழமை  ஓசை 09

## வடபகுதியில் மூளைக்காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகிறது

(யாழ்ப்பாணம்)

கடந்த பல மாதங்களாக வடபகுதியில் மூளைக்காய்ச்சல்நோய் வெகு வேகமாக பரவி வருகின்றது. கடந்த ஆண்டில் மட்டும் ஐம்பத்து நான்கிற்கு மேற்பட்டோர் மூளைக்காய்ச்சல் நோயினால் மரணமடைந்துள்ளனர். மேற்படி நோய்க்கு செய்யப்பட வேண்டிய பேதிய மருத்துவ வசதிகள் பகுதியில் எந்த அரச வைத்தியசாலையிலும் இல்லை. இந்நோயைக் குணப்படுத்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### லெப். விகடன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஊர்காவற் படையினருடன் ஏற்பட்ட மோதலில் லெப். விகடன் என்ற போராளி வீரமரண மடைந்துள்ளார்.

### பாலேந்திரன்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் கடந்த 13 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த பாலேந்திரன் (குமாரசாமி பாலசுப்பிரமணியம் - நாவற்காடு முள்ளியவளை) என்ற போராளி நேற்று வீரமரண மடைந்தார்.

இவர்கள் இருவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## மரணம்

(நமது நிருபர்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாதகல் பகுதியில் நடைபெற்ற இணக்கமன்ற திறப்பு விழாவில் கலந்து உரையாற்றியவர் யாழ். மாவட்ட தளபதி தினேஷ் அல்ல அங்கு உரையாற்றியவர் மக்கள் முன்னணிப் பிரமுகர் தினேஷ் ஆகும்.

## பரீட்சைக் கட்டணங்கள் உயர்வு

(கொழும்பு)

பரீட்சைத் திணைக்களம் இந்த வருடத்திலிருந்து பரீட்சைக் கட்டணங்களைக் க. பொ. த. சாதாரண தரம், உயர் தரம் ஆகியவற்றிற்கு 20 முதல் 40 ரூபா வரை உயர்த்தியுள்ளது எனப் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுமுதல் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள்

## குவைத்தில் இருந்து
# ஈராக்படை வெளியேற்றத்தை
# அமெரிக்கா நிராகரிப்பு

(பக்தாத்)

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் அறிவிப்பைத் தொடர்ந்து ஈராக் படைகள் குவைத்தில் இருந்து விலகிக்கொள்ள ஆரம்பித்துள்ளபோதிலும் அமெரிக்கா ஈராக்கின் படைவெளியேற்றத்தை நிராகரித்துள்ளதோடு வெளியேறிக் கொண்டிருக்கும் படையை வழிமடக்கித்தாக்கவும் முயற்சிக்கின்றது.

வளைகுடாப்போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமாயின் ஜனாதிபதி சதாம் ஹுசைன் தனிப்பட்ட முறையில் முன்வந்து ஈராக்குவைத்திலிருந்து வெளியேறுகிறது என்பதையும் ஐ.நா. பாதுகாப்புச்சபை எடுக்கும் தீர்மானங்களுக்கு உடன்படுகிறது என்றும் அறிவிக்க வேண்டும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. அதுவரை விடுதலைப் போர் தொடரும் என்றும், குவைத்திலிருந்து வெளியேறும் ஈராக் படையினர்மீது கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தும் என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

இதனிடையில் குவைத்திலிருந்து ஈராக் வெளியேறுவதை சோவியத்யூனியன் சதாம் ஹுசைன் உறுதிப்படுத்தியுள்ளதாகவும், போர் நிறுத்தமொன்றை ஏற்படுத்தும்படி ஐ.நா. சபையிடம் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் (4ஆம் பக்கம் பார்க்க)

### பசுக். பிரஜை கொழும்பில் கைது

(கொழும்பு)

பதினைந்து இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் பாகிஸ்தானிய (4ஆம் பக்கம் பார்க்க)

## சந்தர்ப்ப சூழ்நிலை நெருக்கடியே படை விலகலுக்குக் காரணம்

- சதாம்

ஈராக் படையினர் அனைவரையும் ஆகஸ்ட் முதலாம் திகதிய நிலைக்கு திரும்புமாறு அசைவது குவைத்தை ஆக்கிரமிக்கமுன்பு இருந்தநிலைக்கு திரும்புமாறு ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் நேற்று முன்தினம் நள்ளிரவுக்குப்பின் உத்தரவு பிறப்பித்துள்ளார். இவ் உத்தரவைப் பிறப்பிக்க சதாம் ஹுசைன் நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையில் குவைத் தமது தாயகப் பகுதி 19ஆவது மாநிலம் நம்பிடமிருந்து குவைத்தை ஒரு தனி நாடாக பிரித்து வைத்தனர் என அவர் வரலாற்றிலிருந்து சுட்டிக் காட்டினார்.

1990 ஆகஸ்ட் 2ஆம் திகதியிலிருந்து மீண்டும் அதனை நாம் எடுத்துக்கொண்டோம். சட்டபூர்வமாக சாசன ரீதியாக அது நமது நாட்டின் ஒரு பகுதியாக இவ் இடைக்

## போர்நிறுத்தம் கொண்டுவர சோவியத் கோரிக்கை

ஈராக்கில் துருப்புக்களை … துணைவெளிநாட்டமைச்சர் பெலோசாவ்

## ஊர்காவற்படை மீது ஏறாவூரில் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஏறாவூர் அலிபார் சிறிலங்கா இராணுவ முகாமின் அருகாமையில் உள்ள ஊர்காவற்படையினரின் காவல் அரண்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று அதிகாலை மேற்படி காவல் அரண்மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் தொடுத்ததில் ஊர்காவற் படையினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாயினும் சேத விபரங்களை தெளிவாக பெற்றுக் கொள்ள முடியவில்லை. புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்.

## பச்சைப் புலிகளால் இருவர் திருமலை நகரில் கைது

கடந்த 21-02-91இல் திருமலை கடற்கரைச்சாலை வீதியைச் சேர்ந்த ரஞ்சித் என்னும் தமிழ் இளைஞரும இலங்கை கடற்படைத் தளத்தில் சாரதியாக் கடமையாற்றும் காளிகோயில் டையைச் சேர்ந்த குட்டி என்பவரையும் பச்சைப் புலிகள் கைதுசெய்துள்ளனர். அவ்விருவரையும் கைது செய்யும் போது அந்த வெள்ளை நிற வாலுக்குள் நன்றாக தமிழில் கதைக்கக் கூடியவர்கள் இருந்ததாகவும் இவர்கள் புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

வவுனியா ஆஸ்பத்திரியில்

## மருந்துத் தட்டுப்பாட்டால் 10 பேருக்கு மேல் மரணம்

ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் கப்டன் பாலேந்திரன் (குமாரசாமி பாலசுப்பிரமணியம் - நாவற்காடு முள்ளியவளை) என்ற போராளி நற்று வீரமரணமடைந்தார்.

இவர்கள் இருவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்கா நிராகரிப்பு

(பக்தாத்)

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் அறிவிப்பைத் தொடர்ந்து ஈராக் படைகள் குவைத்தில் இருந்து விலகிக்கொள்ள ஆரம்பித்தபோதிலும் அமெரிக்கா ஈராக்கின் படைவெளியேற்றத்தை நிராகரித்துள்ளதோடு வெளியேறிக் கொண்டிருக்கும் படையை வழிமறித்துத் தாக்கவும் முயற்சிக்கின்றது.

வளைகுடாப் போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமாயின் ஜனாதிபதி சதாம் ஹுசைன் தனிப்பட்ட முறையில் முன்வந்து ஈராக் குவைத்திலிருந்து வெளியேறுகிறது என்பதையும் ஐ.நா. பாதுகாப்புச்சபை எடுத்த தீர்மானங்களுக்கு உடன்படுகிறது என்றும் அறிவிக்க வேண்டும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. அல்லாவிடின் போர் தொடரும் என்றும், குவைத்திலிருந்து வெளியேறும் ஈராக் படையினர்மீது கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தும் என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

இதனிடையில் குவைத்திலிருந்து ஈராக் வெளியேறுவதை சோவியத் யூனியனும் சதாம் ஹுசைன் உறுதிப்படுத்தியதாகவும், போர் நிறுத்தமொன்றை ஏற்படுத்தும்படி ஐ.நா. சபையிடம் கேட்டுக்கொண்டிருப்பதாகவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சந்தர்ப்ப சூழ்நிலை நெருக்கடியே படை விலகலுக்குக் காரணம்

## : சதாம்

ஈராக் படையினர் அனைவரையும் ஆகஸ்ட் முதலாம் திகதிய நிலைக்கு திரும்புமாறு குவைத்தை ஆகிரமிக்கமுன்பு இருந்த நிலைக்கு திரும்புமாறு ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் நேற்று முன்தினம் நள்ளிரவுக்குப்பின் உத்தரவு பிறப்பித்துள்ளார். இவ் உத்தரவைப் பிறப்பித்த சதாம் ஹுசைன் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் குவைத் தமது தாயகப் பகுதி 19ஆவது மாநிலம் நம்மிடமிருந்து குவைத்தை ஒரு தனி நாடாக பிரித்து வைத்தனர் என அவர் வரலாற்றிலிருந்து சுட்டிக் காட்டினார்.

1990 ஆகஸ்ட் இரண்டாம் திகதியிலிருந்து மீண்டும் அதனை நாம் எடுத்துக்கொண்டோம். சட்டபூர்வமாக சாசன ரீதியாக அது நமது நாட்டின் ஒரு பகுதியாக இவ் இடைக்காலத்தில் விளங்கியது. ஆனாலும் போர் நெருக்கடி காரணமாக நாம் தள்ளப்பட்டு படை விலகலுக்கு இப்போது ஒப்புக்கொண்டு உள்ளோம். படை விலகலைச் செய்து கொண்டிருக்கிறோம், குவைத்திலிருந்து இன்று முற்றாக விலகிக் கொண்டு விடுவோம் என்று நேற்றைய வானொலி உரையில் குறிப்பிட்டார் சதாம் ஹுசைன்.

மேலும் படை விலகலுக்கு சந்தர்ப்ப சூழ்நிலை நெருக்

(4ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்தம் கொண்டுவர சோவியத் கோரிக்கை

ஈராக்கிய துருப்புக்களை குவைத்திலிருந்து திருப்பி அழைக்கப்போவதாக சதாம் ஹுசைன் கூறியிருப்பதை சந்தேகிக்கத் தேவையில்லை என மொஸ்கோ கூறியுள்ளது இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:

சோவியத்தின் வெளியுறவுத் துணையமைச்சர் அலெக்சாண்டர் பிலிம் கோவ் ஈராக்கின் அறிவிப்பை சந்தேகிக்கக் காரணம் எதுவுமில்லை என்பதால் ஐ.நா சபை போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஈராக் அறிவித்தலை விவாதிக்க பாதுகாப்புச் சபைக் கூட்டம்

(நியூயோர்க்)

ஈராக்கின் அறிவித்தல் குறித்து விவாதிக்க ஐ.நா. பாதுகாப்புச்சபை கூட்டம் ஒன்றை தொடங்கியுள்ளது.

குவைத்திலிருந்து ஈராக் வெளியேறிச் செல்வதற்காக உலக ஸ்தாபனத்தால் குறிக்கப்படவிருக்கும் கால அட்டவணை ஒன்றிற்குப் பாதுகாப்புச்சபை பாக்தாத்திடம் யோசனை கூறிவிருப்பதாகவும், இது குறித்து பதில் ஒன்றைப் பாக்தாத்திடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் ராஜீவத்துறை அதிகாரிகள் நியூயோர்க்கில் தெரிவித்தனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஸ்கட் தாக்குதலுக்கு 27 அமெரிக்க ராணுவம் பலி

(றியாட்)

சவூதி அரேபியாவின் நிலைகொண்டிருந்த அமெரிக்க இராணுவத்தினரின் மாடிக்கட்டடத்தின் மீது ஈராக் நேற்று நடத்திய ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலில் 27 அமெரிக்க வீரர் கொல்லப்பட்டனர். 90ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலினால் அமெரிக்க வீரர் தங்கியிருந்த கட்டடம் முற்றாக சேதமடைந்தது.

# ✻ பிந்திய செய்தி

(லண்டன்)

குவைத்திலிருந்து வெளியேற முற்பட்ட ஈராக் படைகள் வெளியேற முடியாமல் அமெரிக்க கூட்டணிப் படைகள் முற்றுகையிட்டுள்ளதாக பி.பி.சி தெரிவித்தது.

அதேவேளை வளைகுடா யுத்தம் தொடர்பாகப் பாதுகாப்புச் சபையின் சகல தீர்மானங்களையும் ஏற்றுக் கொள்வதாக ஈராக் எழுத்து மூலம் தரும்படி ஐ.நா. பாதுகாப்புச் சபை கோரியுள்ளது

# மாற்றம்

(நமது நிருபர்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாதகல் பகுதியில் நடைபெற்ற இணக்கமன்ற திறப்பு விழாவில் கலந்து உரையாற்றியவர் யாழ். மாவட்ட தளபதி திலீபன் அல்ல அன்று உரையாற்றியவர் மக்கள் முன்னணிப் பிரமுகர் தினேஷ் ஆகும்.

# பரீட்சைக் கட்டணங்கள் உயர்வு

(கொழும்பு)

பரீட்சைத் திணைக்களம் இந்த வருடத்திலிருந்து பரீட்சைக் கட்டணங்களைக் க.பொ.த. சாதாரண தரம், உயர் தரம் ஆகியவற்றிற்கு 20 முதல் 40 ரூபா வரை உயர்த்தியுள்ளது எனப் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுமுதல் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் ரூபா 97-50உம், உயர்தரப் பரீட்சைக்கு 185-00 ரூபாவும் பரீட்சைத் திணைக்களத்திற்குச் செலுத்தவேண்டும்.

இந்தநடைமுறைக்குக்கல்வி, உயர் கல்வி அமைச்சும் அங்கீகரித்துள்ளதென்றும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

# பங்களாதேஷில் இன்று தேர்தல்

(டாக்கா)

பங்களாதேஷில் இன்று நடைபெறும் பாராளுமன்றத் தேர்தல்களில் 6 கோடியே 20 இலட்சம் மக்கள் வாக்களிக்க உள்ளனர்.

300 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலில் 2 தொகுதிகளின் வேட்பாளர்கள் இறந்துவிட்டதையடுத்து 298 இடங்களுக்கான தேர்தலே இடம் பெறுகிறது.

2774 வேட்பாளர்கள் போட்டியில் ஈடுபடுகிறார்கள். ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக்கும் பேகம் கலீதா ஸியா தலைமையிலான பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டன

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் கைது

(கொழும்பு)

பதினைந்து இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் பாகிஸ்தானியர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஊர்காவற்படை மீது ஏறாவூரில் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஏறாவூர் அலிபார் சிறிலங்கா இராணுவ முகாமின் அருகாமையில் உள்ள ஊர்காவற்படையினரின் காவலரண் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று அதிகாலை மேற்படி காவலரண்மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் தொடுத்ததில் ஊர்காவற்படையினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாயினும் சேத விபரங்களை தெளிவாக பெற்றுக் கொள்ள முடியவில்லை. புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்.

# பச்சைப் புலிகளால் இருவர் திருமலை நகரில் கைது

கடந்த 21-02-91இல் திருமலை கடற்கரை வீதியைச் சேர்ந்த ரஞ்சித் என்னும் தமிழ் இளைஞரும இலங்கை கடற்படைத் தளத்தில் சாரதியாகக் கடமையாற்றும் காளிகோவிலடியைச் சேர்ந்த குட்டிஎன்பவரையும் பச்சைப் புலிகள் கைதுசெய்துள்ளனர். அவ்விருவரையும் கைது செய்யும் போது அந்த வெள்ளைவேன் வாலுக்குள் நன்றாக தமிழில் கதைக்கக் கூடியவர்கள் இருந்ததாகவும் இவர்கள் புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது!

# வவுனியா ஆஸ்பத்திரியில்

# மருந்துத் தட்டுப்பாட்டால் 10 பேருக்கு மேல் மரணம்

வவுனியா ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு காரணமாக கடந்த மாதத்தில் பத்துக்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

பாதுகாப்பு வசதியின்மையாலேயே இங்கு மருந்துகள் அனுப்பவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளதாம். ஆனால் இந்த ஆஸ்பத்திரி சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்திற்குள்தான் இருப்பதாக முன்னர் அறிவித்திருந்தனர்.

# ஆனையிறவு முகாமிலிருந்து குடிமனைகள் மீது ஷெல் தாக்கு

(கிளிநொச்சி)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் மாலை நாலுமணிமுதல் இரவு 11.30 மணிவரை தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலின்போது பல ஷெல்கள் குடியிருப்பு பகுதிகளில் வீழ்ந்து வெடித்தபோதிலும் பெரியளவிலான சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை; தாக்குதல் நடாத்தப்பட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

# பயணிகள்மீது புளொட் வவுனியாவில் கெடுபிடி

(ஈச்சமோட்டை)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ முகாம் காவலரணில் நிற்கும் புளொட் இயக்கத்தினர் கொழும்பிலிருந்து வரும் இளைஞர்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்துவரும் பயணிகளிடம் பெருந்தொகையான பணத்தையும், பெறுமதிமிக்க பொருள்களையும் அபகரித்து வருகின்றனர். இத்

(4ஆம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

**விற்பனைக்கு**

மஹாகவியின் கோடை - நாடகம் விலை ரூபா 30/- வெளியீடு விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை.

(B-2029)

**நியு வெஸ்ரேன் எலக்ரோனிக் கோப்**

ரி. வி. டெக், றேடியோ, மணிக்கூடு திருத்துவதுடன் மற்றும் எல்லா விதமான மின்சார உபகரணங்களும் திருத்தப்படும். விற்பனையாளர்களும் வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும் புதிய பழைய பாடல்களும் (புரட்சிப்பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடம் சந்தி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

(B-2075)

**வானொலி நாடகங்கள்**

வானொலி நாடகம் எழுதிப் பழகவேண்டுமா? வாருங்கள் 101 வானொலி நாடகங்களை எழுதிய அரியாலூர் நடராசர் பிள்ளையின் கெட்டிக்காரர்கள் 25/- முதலாம் பிள்ளை 30/- 19 நாடகங்கள். நாடகங்கள் பற்றிய விளக்கங்கள் விமர்சனங்களும் கொண்டவை.

(R.1136)

**தோத்திரத்திரட்டு**

சைவத் திருநெறித் தோத்திரத்திரட்டு (அகத்தியர் தேவாரத்திரட்டு, உமாபதி சிவாசாரியார் அருள்முறைத் திரட்டு உட்படப் பன்னிரு திருமுறைகளும் திருப்புகழ் பாடல்களும் அடங்கியது) தொகுப்பு: க. சி. குலரத்தினம், விலை ரூபா 25/- வெளியீடு விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(B 2028)

**விற்பனையாகிறது**

அக்காக்களும், பங்கைக்களும் ஓர் அறிமுகம் - தாவரவியல் மாணவர்களின் துணை நூல். ஆக்கம்: கலாநிதி சிவபாலன் Ph D. B Sc விலை ரூபா 50/- சொற்ப பிரதிகள் மட்டும் உள்ளன விற்பனையாளர்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(B-2027)


## பலாலிக்கு புலமைப்பரிசில்

(பருத்தித்துறை)

அவஸ்திரேலியா வழங்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டத்தில் பெளதீகவியல் துறை புலமைப்பரிசிலை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி

## நிர்வாகிகள் தெரிவு

(கொழும்புத்துறை)

மணப்புலம் கலைமன்ற சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை (24-02-'1) அன்று நடைபெற்றது. போஷகராக திரு க. செல்வரட்ணம், தலைவராக திரு. க விஜயரட்ணம், செயலாளராக திரு இ வேசுதாஸன், பொருளாளராக திருமதி செல்லத்துரை சச்சிதானந்ததேவி, உப தலைவராக திரு மனோராசா நிமலராஜா உப செயலாளராக திரு. பரமசாமி ஸ்ரீதரன், உப பொருளாளராக செல்வி செ. காந்திமகள் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களாக திரு. சி சுப்பிரமணியம், வே. தேவசகாயம், திருமதி து. புஸ்பராணி, செல்வி சி. பதுமராணி, திரு. நீ பிலிப்பானந்தம் நிலையப் பொறுப்பாளராக செல்வி. சி. சோதி. கணக்காய்வாளராக திரு இ இக்னேசியஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(24)

## மீன்பிடிபடகுமீது ஹெலி தாக்கு

(செ. த. மை)

இரணைதீவு கடற்பகுதியில் ஆழ்கடலில் மீன் பிடிக்கச்சென்ற மூன்று வள்ளங்கள் மீது உலங்குவானூர்தி ஒன்று தாக்குதல் மேற்கொண்டதில் வள்ளங்கள் சேதமடைந்தன அதிலிருந்த கடற்தொழிலாளர்கள் கடலுக்குள் பாய்ந்ததால் காயமெதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

கடந்த 23ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. உலங்குவானூர்தி 15 நிமிடங்கள் தாக்குதல் நடத்திவிட்டு சென்றபின்னர் தொழிலாளர்கள் சேதமடைந்த வள்ளங்களுடன் கரையை வந்து சேர்ந்தனர்.

## கடமைக்கு வரவும்

(யாழ்ப்பாணம்)

1990 ஜூன் முதல் தனது அலுவல்களை கண்டி வீதி மாங்குளத்தில் மேற்கொள்ள முடியாதிருந்த, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முல்லைத்தீவு. தற்பொழுது வவுனிக்குளத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசன இலாகா விடுதியொன்றில் இயங்குவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவே இதுவரை அங்கு சமுகமளிக்காத இக்காரியாலயத்தைச் சேர்ந்த ஊழியர்களை

## சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆரம்பக்கல்வி சேவைக்காலப் பயிற்சி நெறியை மேற்கொண்ட யாழ்ப்பாணம் கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் யாழ்-சாதனா சிறுவர் பாடசாலைக்கும் (கல்வித் சந்தோர் அருகாமை) சாவகச்சேரி கோட்ட ஆசிரியர்கள் யா-சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரிக்கும் இன்று முற்பகல் 9.00 மணிக்கும் நண்பகல் 12.00 மணிக்கும் இடையில் தவறாது சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

## ஒரு கோடி ஒதுக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வன்செயல் காரணமாக உயிர் இழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

வன்செயல் காரணமாக உயிர் இழந்த குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க மேலும் ஒரு கோடி ரூபாவை வழங்கியுள்ளது என்று புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.


**PHYSICS**

திரு கலாமணி *B.Sc (Hons), Dip in Ed.*

(யாழ். நகரில் எமது நிறுவனத்தில் மட்டும் கற்பிப்பார்)

**90 பிரிவு PAPER CLASS**

கடந்த கால (79-90 ம் ஆண்டுவரை) பரீட்சை வினாக்களுக்கு விடையளிக்கப்படும்.

நேரம்: செவ்வாய். 6-30 a m. புதன் 2 30 p m. வியாழன் 6-30 a.m.

*Radiant Institute*

**Ariyalai, - Jaffna**

(R-1137)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் யாழ். பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில்,

**சமூகவியல் அத்திவாரப் பாடநெறி**

1991/1992ஆம் வருட சமூகவியல் அத்திவாரப் பாடநெறிக்கான விண்ணப்பம் 1 - 2 - 1991 முதல் விநியோகிக்கப்படும்.

1. விண்ணப்பதாரிகள் 15-01-91 திகதியன்று 18 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
2. கல்வித்தகைமை க. பொ. த சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் விரும்பத்தக்கது.
3. போதனை ஆங்கில அல்லது சிங்கள மொழிமூலம் நடாத்தப்படும். 1992 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழிலும் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
4. இப்பாட நெறி இரண்டு வருடகாலத்தைக் கொண்டிருக்கும்.
5. இப்பாட நெறியைப் பூர்த்தி செய்தவர்கள் சட்டமானிப்பாடநெறி (LLB, முகாமைத்துவ டிப்ளோமா (Diploma in Management) போன்ற பாடநெறி

**கட்டட ஒப்பந்தக்காரர்களுக்கு விசேட அறிவித்தல்**

ICTADல் பதிவு செய்ய விரும்பும் கட்டட ஒப்பந்தக்காரர்கள் உடனடியாக எங்கள் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம்
செயலாளர்
**வடமாகாண ஒப்பந்தகாரர் சங்கம்**
15, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(B/2077)


## எம் கடன் மறந்து கிடக்கின்றோம்

பூனையும்
பெரியோர்
புகுந்து
பார்த்துக்
எறும்பு
சோம்பல்
காக்கா
பகிர்ந்து
வேதம்கூட
கொல்லவரும்
நாயென்று
பேசிடும்
மாற்றான்
இத்தனை
எம்கடன்

புலியாம்
சொல்ல
இருக்கும்
கொண்டே
சின்னப்
இன்றியே
தாங்கள்
உண்டு
போதிக்குது
பகைவையும்
நாங்கள்
ஐந்தறிவான
வந்தால்
தெரிந்தும்
மறந்து

தன்வீட்டில்
கேட்டிருக்கோம்
சங்கத்தை
பலபேராம்
பிராணியாம்
உழைத்திடுதாம்
இணைத்துடனே
மகிழ்ந்திடுதாம்
எங்களை
கொல்லலாமாம்
கீழ்த்தரமாய்
இனம்கூட
போர்தொடுக்கும்
எம்மில்பலர்
கிடக்கின்றோம்.

— பைம்




**நினைவு தருகின்றோம்**

**பெப்ரவரி 27**

1986ஆம் ஆண்டு நாவடியில் கம்புத் தொழிற்சாலைமீது ஸ்ரீலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட குண்டுவீச்சின்போது வீரமரணமடைந்த

லூக்காஸ் (நாவலப்பிட்டி)

ரிகள் 25/- முதலும் பின்னை 30/- 19 நாடகங்கள். நாடகங்கள் பற்றிய விளக்கங்கள் விமர்சனங்களும் கொண்டவை. (R. 1136)

## தோத்திரத்திரட்டு

சைவத் திருநெறித் தோத்திரத்திரட்டு (அகத்தியர் தேவாரத்திரட்டு, உமாபதி சிவாசாரியார் அருள்முறைத் திரட்டு உட்படப் பன்னிரு திருமுறைகளும் திருப்புகழ் பாடல்களும் அடங்கியது) தொகுப்பு: க. சி. குலரத்தினம், விலை ரூபா 25/- வெளியீடு விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(B 2028)

## விற்பனையாகிறது

அகராதிகளுக்கும், பங்கைகளுக்கும் ஓர் அறிமுகம் - தாவரவியல் மாணவர்களின் துணை நூல். ஆக்கம்: கலாநிதி சிவபாலன் Ph. D. B Sc விலை ரூபா 50/- சொற்ப பிரதிகள் மட்டும் உள்ளன விற்பனையாளர்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(B-2027)

## மாணவிக்கு புலமைப்பரிசில்

(பருத்தித்துறை)

அவுஸ்திரேலியா வழங்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டத்தில் பெளதிகவியல் துறைப் புலமைப்பரிசிலை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி மாணவி செல்வி பவானி சுலோசனி ஈசுகம் பெற்றுள்ளார்.

(25)

## ஹெலி தாக்கு

(செ. த. மை)

இளாலி கடற்பகுதியில் ஆழ் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மூன்று வள்ளங்கள் மீது உலங்குவானூர்தி ஒன்று தாக்குதல் மேற்கொண்டதில் வள்ளங்கள் சேதமடைந்தன அதிலிருந்த கடற்தொழிலாளர்கள் கடலுக்குள் பாய்ந்ததால் காயமெதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

கடந்த 23ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது உலங்குவானூர்தி 15 நிமிடங்கள் தாக்குதல் நடத்திவிட்டு சென்றபின்னர் தொழிலாளர்கள் சேதமடைந்த வள்ளங்களுடன் கரையை வந்து சேர்ந்தனர்.

## கடமைக்கு வரவும்

(யாழ்ப்பாணம்)

1990 ஜூன் முதல் தனது அலுவல்களை கண்டி வீதி மாங்குளத்தில் மேற்கொள்ள முடியாதிருந்த, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முல்லைத்தீவு. தற்பொழுது வவுனிக்குளத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசன இலாகா விடுதியொன்றில் இயங்குவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவே இதுவரை அங்கு சமூகமளிக்காத இக்காரியாலயத்தைச் சேர்ந்த ஊழியர்களை அங்கு வருமாறு மாவட்ட முகாமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கண்ணீர் அஞ்சலி

அமரர் செல்வி

## ருத் ஜெயமணி. மேன்

(இளைப்பாறிய அதிபர், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

செல்வி ஆர். ஜே. மேன் அவர்கள் 17-02-1991 அன்று இறைவடி எய்தினார். எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி மேம்பாட்டிற்கும் அரும்பணியாற்றி சாதனைகள் பல புரிந்த இளைப்பாறிய அதிபர் செல்வி. மேன் அவர்களுக்கு எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்.

அதிபர்,
மெதடிஸ்த பெண்கள் உயர்தரபாடசாலை, பருத்தித்துறை.
ஆசிரியர்கள் மாணவிகள், (பாடசாலை அபிவிருத்திச்சபையினர்)

(R-1135)

நேரம்: செவ்வாய் 6-30 a.m. புதன் 2-30 p.m. வியாழன் 6-30 a.m.

## Radiant Institute

**Ariyalai, - Jaffna**

(R-1137)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
யாழ். பிராந்திய நிலையம்,
பிறவுண் வீதி, கொக்குவில்,

# சமூகவியல் அத்திவாரப் பாடநெறி

1991/1992ஆம் வருட சமூகவியல் அத்திவாரப் பாடநெறிக்கான விண்ணப்பம் 1-2-1991 முதல் விநியோகிக்கப்படும்.

1. விண்ணப்பதாரிகள் 15-01-91 திகதியன்று 18 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
2. கல்வித்தகைமை க. பொ. த சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் விரும்பத்தக்கது.
3. போதனை ஆங்கிலம் அல்லது சிங்கள மொழிமூலம் நடாத்தப்படும். 1992ஆம் ஆண்டு தொடக்கம் தமிழிலும் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
4. இப்பாடநெறி இரண்டு வருடகாலத்தைக் கொண்டிருக்கும்.
5. இப்பாடநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் சட்டமாணிப்பாடநெறி (LLB, முகாமைத்துவ டிப்ளோமா (Diploma in Management) போன்ற பாடநெறிகளுக்குத் திறந்த பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யமுடியும்.
6. இப்பாடநெறிக்கு ஒரு வருடத்திற்குக் கட்டணம் ரூபா. 1,120 செலவு கட்ட வேண்டும். இக்கட்டணத்தை மூன்று தவணைகளில் கட்டலாம்.
7. விண்ணப்பங்கள் யாவும் மாசி மாதம் 28ஆம் திகதி (28-02-91)க்கு முன்னர் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் கிடைக்கப்பெற வேண்டும்.
8. விண்ணப்பப் படிவங்கள் பெறுவதற்கு ரூபா 50க்கு மணியோடர் (Money order) "திறந்த பல்கலைக்கழகம், நுகேகொட" என்ற பெயர் முகவரிக்கு எடுத்து யாழ். பிராந்திய நிலையத்தில் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.
9. குறிப்பிட்ட தொகை விண்ணப்பங்களே கிடைக்கப்பெறுமென்ன படியால், இப்பாடநெறியைப் பயில்வதற்கு ஆர்வமுள்ளவர்கள் கூடிய விரைவில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமபடி வேண்டப்படுகின்றனர்.
10. யாழ் பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப்படிவங்களையும், மேலதிக விபரங்களையும் திங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் (சனி, ஞாயிறு உட்பட) காலை 9-30 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

கொக்குவில்.
01-02-1991

((B-2076)

மு. தில்லைநாதன்
உதவிப் பணிப்பாளர்

| | | |
|---|---|---|
| பார்த்துக் | கொண்டே | பலபேராம் |
| எறும்பு | சின்னப் | பிராணியாம் |
| சோம்பல் | இன்றியே | உழைத்திடுதோம் |
| காக்கா | தங்கள் | இனத்துடனே |
| பகிர்ந்து | உண்டு | மகிழ்ந்திடுதோம் |
| வேதம்கூட | போதிக்குது | எங்களை |
| கொல்லவரும் | பகைவையும் | கொல்லலாமாம் |
| நாயென்று | நாங்கள் | கீழ்த்தரமாய் |
| பேசிடும் | ஐந்தறிவான | இனம்கூட |
| மாற்றான் | வந்தால் | போர்தொடுக்கும் |
| இத்தனை | தெரிந்தும் | எம்மில்பலர் |
| எக்கடன் | மறந்து | கிடக்கின்றோம். |

— பைப்




## பெப்ரவரி 27

1986ஆம் ஆண்டு தாவடியில் தம்புத் தொழிற்சாலைமீது ஸ்ரீலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட குண்டுவீச்சின்போது வீரமரணமடைந்த

**லூக்காஸ்** (நாவலப்பிட்டி)

அவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

கண்மூடிப் போன காவியங்களே!
இன்று;
நீங்கள் தீயாகிப் போன தினம்
நெருப்பாக நின்று, நெருப்பாகி;
எங்கள்
நெஞ்சத்தில்... எரிப்பலமாகி;
உரமாகிப் போனீர்கள்.
உங்களின் இறுதி மூச்சு
இங்கு, புயலாகியுள்ளது.
நீங்கள் உலாவிய இந்த மண்
எரிமலையாகி எழுந்து நிற்கிறது.
அன்னியனை விரட்டும் புனிதப்போரில்
அணைந்த தீபங்களே.
நீங்கள் வென்றீர்கள்.
மீண்டும்... போர்முரசின்
முழக்கம் கேட்கிறது.
வேங்கைகளே!
நீங்கள் விழுந்த மண்ணில் தான்
நாங்கள் எழுந்து நிற்கின்றோம்.
கனவுகள் நனவாகும் வரை
எங்கள் பயணம் தொடரும்!
எதிரியின் பாசறை எரியும்!!

— விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2069)

தமக்கு நம்பிக்கையுள்ள நிலைப்பாட்டிலேயே புலிகள் இருப்பார்களேயானால் அவர்களை இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பதைத் தவிர வேறு வழியில்லை துப்பாக்கியின் இருக்குமவரை புலிகள் சக்தி மிக்கவர்களாகவே இருப்பார்கள்.''

இவை யாவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம்.பியும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அநுரா பண்டாரநாயக்காவின் கருத்துக்கள். இதிலிருந்து இலங்கையின் தமிழ்த்தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் தெளிவு திட்டவட்டமான கொள்கை எதையும் கொண்டிருக்கவில்லை என்பது வெளியாகின்றது. இந்நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்கள் கொழும்பில் தமிழ்க் குழுக்களுடனும், முஸ்லிம் குழுக்களுடனும் என்ன பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றார்கள் என்பது மர்மமாகவே உள்ளது.

1977 இல் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கையில் தமிழர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்திருந்தது. இது வரையும் எந்தவொரு ஆக்கபூர்வமான முடிவையும் அது முன்வைக்கவில்லை. இராணுவத் தீர்வையே நாடி நிற்கின்றது. இனிமேலும் முன்வைக்கப்போவதற்கான ஏற்பாடுகளும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்நிலையில், ஐ.தே.கட்சி அரசாங்கம் என்ன தீர்வை முன்வைக்கப்போகிறது எனத் தாம் எதிர்பார்த்து இருப்பதாக அநுரா பண்டாரநாயக்கா கூறுவதன் பொருள் அரசாங்கம் என்ன தீர்வை வைத்தாலும் அதை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதன் வெளிப்பாடே. அத்தோடு நாம் ஒரு திட்டத்தை முன்வைத்தால் ஐ.தே.கட்சி அதைச் சாட்டாக வைத்து அரசியல் இலாபம் தேடிவிடக் கூடாது என்பதும் அவர்கள் கரிசனையாகும். இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு தென்னிலங்கை அரசியற் கட்சியிடம் இருந்து தீர்வுகள் வரும் என எதிர்பார்க்க முடியாது.

ஆயுதபலத்தின் காரணமாகவே மக்கள் புலிகளை ஆதரிக்கின்றார்கள் என்பது தமிழ் மக்களின் உணர்வை அநுரா பண்டாரநாயக்கா விளங்கிக் கொள்ளாமையின் வெளிப்பாடாகும். விடுதலைப் புலிகளைவிட பல மடங்கு ஆயுத வலிமையுள்ள இந்திய இராணுவத்திற்கோ, சிறிலங்கா இராணுவத்திற்கோ, அன்றித் தமிழ்த் தேசிய இராணுவத்திற்கோ தமிழ் மக்கள் ஆதரவு அளிக்கவில்லை. ஆயுத பலத்தின் அடிப்படையில் மக்கள் ஆதரவு கொடுப்பதாக இருந்தால் புலிகளைத் தவிர்ந்த ஏனையவர்களுக்கல்லவா ஆதரவு கொடுத்திருக்க வேண்டும்? அதை விடுத்து மக்கள் புலிகளை ஆதரிக்கின்றார்கள் என்றால் புலிகளின் மீதும், அவர்களின் போராட்ட வழிமுறைகளின் மீதும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையே காரணமாகும்.

இந்நிலையில், புலிகளின் தமது கொள்கையில் இருந்து புலிகள் விட்டுக் கொடுக்காதவரையில் இராணுவ நடவடிக்கை தவிர வேறு வழி இல்லை என அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளமை, விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் சக்தியாக இருக்கும்வரை அரசியற் தீர்வு இல்லை என்பதையே தெளிவுபடுத்துவதாக உள்ளது. அதாவது புலிகள் தமிழர் உரிமைகளைப் பற்றிப் பேசாது தமது பதவிகளைப் பற்றிப் பேசினால் தான் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என மறைமுகமாகத் தெரிவிக்கின்றார் போலும்.

மக்களுக்கும், சொத்துக்களுக்கும் இவ்வளவு இழப்புக்கள் ஏற்பட்ட பின்பும் சிறிலங்கா அரசாங்கமும் சரி, சிங்கள எதிர்க்கட்சிகளும் சரி இன்னமும் தமது கொள்கையில் இருந்து மாறியதாக இல்லை. இந்நிலை தொடரும் மட்டும் தமிழர் தம் உரிமைக்குப் போராடுவதைத் தவிர வேறுவழியே இல்லை.

---

இத்தொழில் முறையில் இது வரை பயிற்சித் திட்டங்களோ அல்லது தொழில்நுட்ப உதவிகளோ மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் இந்தியாவில் இத்தொழிலில் பல்வேறு தொழில்நுட்ப பயிற்சித் திட்டங்களை செயற்படுத்தப்பட்டும், அங்குகூட பாரிய உற்பத்தி தாக்கத்தினை ஏற்படுத்த முடியவில்லை.

இந்நிலையில் பனைவேறும் இயந்திரமொன்றை உருவாக்கி மக்களுக்கு விநியோகிப்பதன் மூலமே இத்தொழிலை முன்னேற்ற முடியும். அதேவேளை தமிழீழ பொருளாதாரத்தை கணிசமான அளவு விருத்தி செய்ய முடியும் என்ற அடிப்படையில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆயினும்

... எமது பிரதேசத்திலுள்ளதும்

# விருத்தி செய்வோம்

...பத்தி செய்யலாம்; ஆகவே 24,000 மெற்றிக் தொன் சீனியைப் பெற 40000000 லீற்றர் பதனீர் தேவைப்படுகின்றது. ஆனால் சராசரியாக 150 லீற்றர் பதனீர் ஒரு பனையிலிருந்து பெறமுடிகின்றது. ஆகவே 400000000 லீற்றர் பதனீரைப் பெற 2070000 பனைமரங்கள் பயன்படுத்தப்படவேண்டும். ஆகவே எமது பிரதேசத்திலுள்ள 1/3 பங்கு பனை மரங்களை முழுமையாகப் பயன்படுத்தப்படும் பட்சத்தில் எமது சீனித்தேவையை முற்றாகப் பூர்த்தி செய்ய முடியும்.

நிலையில் இது ஓர் மிகச் சிறந்த வருமானமாகும்.

ஆகவே வேலையின்றி அலையும் எமது இளைஞர்கள் பனைத்தொழில் செய்வதன் மூலம் சிறந்த வருமானத்தையும் அதேவேளை தமிழீழப் பொருளாதாரத்தையும் விருத்தி செய்ய இயலும் என்ற மனப்பான்மையுடன் முன்வரல் வேண்டும். சமூக ஒடுக்குமுறைகளைக் களைந்து சாதிய அமைப்புகளைத் தன்னம்பிக்கை மிக்க சுயபொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப பனைத்தொழில் விருத்தி செய்வோம்.

- தமிழீழ ஆய்வு நிறுவனம்

---

## முறைசாராக் கல்வித் திட்டத்தை விரிவுபடுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்வித்திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கில் கல்விக் கோட்டங்களில் தேறும் முறைசாராக் கல்வி உபவள நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

மேற்படி உபவள நிலையங்கள் கல்வி, தொழில், முதலுதவி, நூலகசேவை போன்றவற்றிற்கான வளர்ச்சித்திட்டங்களுடன் சமுதாய வளர்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப் படுத்தவுள்ளது.

இதன் முதல் கட்டமாக வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி ம. மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி காலை 9.00மணிக்கு உபவள நிலையம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது (க)

## சிறு தானிய பயிர்ச்செய்கை; அதிகாரிகள் மேற்பார்வை

யாழ். மாநகரசபை மற்றும் அதை அண்டிய பகுதிகளில் நடாத்தப்படும் சிறு தானியப் பயிர்ச்செய்கையை செயலக அதிகாரிகள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்கள் மேற்பார்வை செய்து வருகின்றனர்.

பெரும்போக பயிர்ச் செய்கை அறுவடை முடிவடைந்ததும் தெரிவுசெய்யப்பட்ட அனைத்து விவசாயிகளும் சிறு தானியப் பயிர்ச்செய்கைகளை தமது நெற்காணிகளில் ஆரம்பிக்க வேண்டும் என பதினையாயிரம் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு அச்செய்கைகளுக்கான விதைகள் வழங்கவும் ஏற்பாடாகி இருத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## மத்திய கல்லூரி மைதானம் களை கட்டத் தொடங்குகின்றது

யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம் மீண்டும் களைகட்டத் தொடங்கியுள்ளது. இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலம் முதல் மேற்படி மைதானம் கைவிடப்பட்ட நிலையில் இருந்து நேற்று முன்தினம் பிற்பகல் மைதானம் துப்புரவு செய்யப்பட்டு பாடசாலைக் கிறிக்கட் அணிக்கான பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

## ஹாட்லியில் இருந்து 64 மாணவர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இருந்து 64 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அண்மையில் வெளியான க.பொ.த உயர்தர பரீட்சையின் வெட்டுப்புள்ளி அட்டவணையின் படி இந்த மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

## இலவச தையல் பயிற்சிவகுப்புகள்

கொக்குவில் மேற்கு கிராம முன்னேற்றச் சங்க நிலைய மண்டபத்தில் நேற்றையதினம் இலவச தையல் பயிற்சி வகுப்புக்கள் பயிற்றப்பட்ட ஆசிரியரால் நடாத்தப்பட்டது.

மேலும் எமது சங்கத்தின் அனுசரணையுடன் தாய்மார்கள் குழந்தைகளுக்கான இலவச சிகிச்சை, பகுதிநேர இலவச அரசமருத்துவ சேவை, அவசர முதல உதவிசேவை, நூல் நிலைய சேவை, நூல் நிலைய புத்தகம் இரவல் கொடுக்கும் பகுதி, சிறுவர் பாடசாலை, றோட்டரி கிராமிய குழுவினால் செயல்படுத்தும் சேவை, உள்ளக விளையாட்டுப் பகுதி எனும் பல்வேறு சேவைகளும் இலவசமாக நடைபெறவுள்ளதாக நிலையத்தின் செயலாளர் இ. செல்வநாதன் அறிவிக்கின்றார்.

## மீண்டும் பழைய இடத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்திய சாலை துவிச்சக்கரவண்டி நிறுத்துமிடம் மீண்டும் வைத்தியசாலைக்குள் வந்துவிட்டது.

இந்த துவிச்சக்கரவண்டி பாதுகாப்புச் சேவையை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். போதனா வைத்தியசாலையை பொறுப்பேற்க முன்பு நோயாளர் நலன்புரிச்சங்கம் பொறுப்பேற்று நடத்தி வந்தது. ஆனால் பின்பு சைக்கிள் பாதுகாப்பு வெளியேற்றப்பட்டது. இப்பொழுது மீண்டும் சைக்கிள் நிறுத்துவது வைத்திய சாலை வளவுக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். (வே)

# அகதிகள் படகுமீது துப்பாக்கிச்சூடு 4 சடலங்களுடன் கரை ஒதுங்கியது

(செ. த. மை)

தமிழ் நாட்டிலிருந்து வல்வெட்டித்துறை நோக்கி அகதிகள் படகில் வந்த நால்வர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்கள்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தெய்வபமா தணிகாசலம் (வயது 65), அவரது மகன் தணிகாசலம் சிறி (வயது 24), மற்றும் பரமகுரு மகேந்திரன் (வயது 20), வரதராசா இராமலிங்கம் (வயது 21) ஆகியோரே மரணமானவர்கள்.

கடந்த 18 ஆம் திகதி தமிழ் நாட்டிலிருந்து படகில் புறப்பட்ட இந்த நால்வரும் சடலங்களாகப் படகுடன் மீண்டும் தமிழ் நாட்டுக்கரையை அடைந்ததாகவும் 20 ஆம் திகதி அங்கேயே நான்கு சடலங்களும் அடக்கம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் ஏற்கனவே அகதிகளாக இந்தியா சென்றிருந்தவர்கள்.

## வன்னி மாவட்டங்களுக்கு புத்தக விநியோகம் இல்லை

(நல்லூர்)

யாழ். குடாநாட்டிலுள்ள பாடசாலைகளுக்குத் தேவையான இலவச பாடப்புத்தகங்கள் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளன. மட்டக்களப்பிற்கும் பாடப்புத்தகங்கள் முழுமையாகக் கிடைத்துள்ளன. ஆனால் தமிழர் வாழும் ஏனைய மாவட்டங்களுக்கு புத்தகங்கள் உரிய காலநேரத்தில் கிடைக்கவில்லையாம்.

யாழ்ப்பாணத்துக்குரிய புத்தகங்களை வெளியீட்டுப் பகுதியிலிருந்து கொழும்புத் துறைமுகத்துக்கு எடுத்துச்செல்ல 70,000 ரூபா செலவாகியுள்ளது. பெரும் சிரமங்களின் மத்தியில் புத்தகங்களை தாம் யாழ்ப்பாணம் கொண்டு வந்ததாகக் கல்வி அதிகாரி திரு. தங்கராசா தெரிவித்தார்.

## வித்தியானந்தனை நினைவாக புலமைப்பரிசில் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனைக் கௌரவிக்கும் முகமாக அவரது பெயரில் ஒரு புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தை யாழ் பல்கலைக்கழகம் செயற்படுத்த முனைந்துள்ளது.

இதற்கு பேராசிரியர் சு. வித்தியானந்தனின் மாணவர்கள் நண்பர்கள், தமிழியல் அபிமானிகள் அனைவரும் முனைந்து இந்த புலமைப் பரிசில் நிதியத்தைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

இதற்குரிய நன்கொடைப் பணத்தை நிதியாளர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசோலையாக இருக்கும் (?) உதவிப் பதிவாளர் கணக்கியல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

வடபகுதியில்

வைத்தியசாலைகளில் சிகிச்சை முறை மற்றும் நவீன சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

சூழலின் நீர், வளிமண்டலம் போன்ற பகுதிகள் அசுத்தமடைதல் மற்றும் சுகாதார பழக்க வழக்கங்களை பின்பற்ற தவறியமை ...

## காவலாளி மர்ம மரணம்

(கொடிகாமம்)

கொடிகாமத்தில் உள்ள தெ. இ. ப. நோ. க. சங்க காவலாளியான வரணியைச் சேர்ந்த வி. கந்தையா (வயது 60) என்பவர் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். இவரது சடலம் சங்கத்தின் உள் வாசலில் காணப்பட்டது.

இச் சம்பவம் ஞாயிற்றுக் ...

## மதிப்பீடு செய்ய 15 இலட்சம் பேர்

(டில்லி)

இந்தியாவின் குடிசனத் தொகையை மதிப்பீடு செய்வதற்கென 15 இலட்சம் பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் இந்தியாவின் குடிசனத் தொகை கணக்கெடுப்பு ஆரம்பமாகிய போதே 15 இலட்சம் பேர் நியமிக்கப்பட்டனர்.

இந்தியாவில் 86 கோடியே 50 இலட்சம் பேர்வரை வாழ்வதாக முந்திய கணக்கெடுப்பில் இருந்து தெரியவந்துள்ளது.

ஈராக்படை

நாளிந்தான சோவியத் பிரதிநிதி கூறியுள்ளார்

ஈராக் ஐ. நா. தீர்மானங்களுக்கு உடன்படுவதாக அறி...

## மாணவர் ஒன்றியம் பேரணி நடாத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடந்த மாணவர் ஒன்றியக் கலந்துரையாடலை மன்னாரில் நடந்த ஆசிரியர் படுகொலைகளைக் கண்டித்தும் தமிழ் மாணவரின் பரீட்சை சம்பந்தமான ஏனைய தடைகளை எதிர்த்தும் வெள்ளிக்கிழமை பேரணி ஒன்று நடாத்துவதாகவும் அதற்கு பாடசாலை மாணவர்களுக்கு ஆதரவாக ஆசிரியர்கள், பாடசாலை மாணவ ஆசிரியர்களினதும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினதும் ஆதரவையும் கோருவதாக தீர்மானிக்கப்பட்டது.

# 41 ஆம் நாள் வளைகுடாப் போர்

★ "வளைகுடாப்போர் சில நாட்களுக்குள் முடிந்துவிடும்" என்று வளைகுடாவின் அமெரிக்க மாலுமிப்படைத் தளபதி ஜெனரல் வால்டர் போமர் தெரிவித்தார்.

★ வளைகுடாப்போர் குறித்த சமாதான திட்டத்திற்கு அணிசேரா இயக்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என இந்தியப் பிரதமர் சந்திரசேகர் கேட்டுக்கொண்டுள்ளார். இதற்காக அவசர கூட்டத்தை புதுடில்லியில் நடத்தலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

★ 'ஈராக்கின் போர் அனுபவம் பெற்ற 1,53,000 பேரைக் கொண்ட குடியரசுக் காவல் படையைத் தாக்குவது மிகவும் கஷ்டமானது" என கூட்டுப்படை அதிகாரிகள் தமது இராணுவத்தினருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

★ குவைத்தின் பாராளுமன்றக் கட்டடமும் இரு பெரிய ஆடம்பர ஹோட்டல்களும் ஈராக்கினால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன.

★ "அராபிய சிங்கங்களே பாம்பின் தலைகளை நசுக்குங்கள்" என ஈராக் தனது இராணுவத்தினருக்கு உற்சாகமூட்டக்கூடிய செய்திகளை போர்க்களத்திற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது.

## வளைகுடாவில உள்ளோரை திருப்பி அழைக்க யோசனை

(கொழும்பு)

வளைகுடாவில் உள்ள இலங்கையரை அங்கிருந்து திருப்பி அழைத்து வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவசியம் ஏற்படின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வெளிநாடுகளிலுள்ள மனித நேய நிறுவனங்களின் உதவியையும் நாடவுள்ளது.

மத்திய கிழக்கில் வேலை பார்ப்பவர்களின் விபரங்களை மத்திய கிழக்கு தொழில் அலுவலகங்களில் பதியுமாறு உறவினர்கள் கேட்கப்பட்டுள்ளனர். இதற்கென தனிப்பிரிவு ஒன்று இயங்கும்.

## மாணவர் கூட்டம்

மன்னார்ம வட்டத்திற்சிறி ...

